திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரை மேம்பாலத்திற்குக் கீழே கடைகள் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று முன்பு கேட்டபொழுது அதற்கு ஆவன செய்யும் என்று அமைச்சரவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி அந்த இரண்டு பாலங்களுக்கும் கீழேயிருக்கின்ற இடங்களில் பன்றி, மாடு மற்றவைகள் போய்க் குடிபுகுவதற்கு முன்பாக அரசு ஏலத்திற்கு விட்டு கடைகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனிக்கேள்வி போட வேண்டும். அதுபோல செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

பில்லூருக்கருகே, பாலாற்றின் குறுக்கே அணை

*** 303. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடார்க்காடு மாவட்டம், பில்லூருக்கு அருகே பாலாற்றில் புதிய அணை ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(உ) இத்திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் முதல்நிலை மதிப்பீடு ரூ. 350.00 லட்சமாகும்.

(உ) இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பாலாறு அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் தற்போதுள்ள 27,000 ஏக்கர் ஆயக்கட்டுக்கு நம்பகமான பாசன வசதி கிடைக்கும் என்றும், கூடுதலாக 13,500 டன் உணவு தானிய விளைச்சல் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. எம். எ. லக்கீப் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் பாசன வசதிக்கு மட்டுமல்லாமல், இப்பொழுதுள்ள சூழ்நிலையில் குடிதண்ணீர் வசதி பெறுவதற்கும் இது மிகவும் இன்றியமையாத

1973 மார்ச் 9]

காகும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் மாண்புமிகு அமைச்சரவர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே, அதை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தொடக்க ஆய்வின்போது நீர்ப்பரப்பின் சில பகுதிகள் ஆந்திரப் பிரதேச எல்லைக்குள் அமைந்திருப்பதாகக் கண்டறியப்பட்டதென்றும், எனவே, இத்திட்டம் குறித்த விரிவான ஆய்வை மேற்கொள்வதற்கு ஆந்திரப் பிரதேச அரசின் அனுமதியைப் பெறுவது அவசியமாகும் என்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார். ஆந்திரப் பிரதேச அரசின் இசைவைக் கோரி இந்த அரசு எழுதியுள்ளது. ஆந்திரப் பிரதேச அரசின் அனுமதி கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

கதர் இயக்குநர் அலுவலகம்

* 304 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கதர் இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு கார் வழங்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், எப்போது, யாரிடமிருந்து ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) ஒரு ஹெரால்டு வேன் 7—1—1970-ல் செங்கல்பட்டு மாவட்ட பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கத்திலிருந்து வாங்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படி வாங்கப்பட்டுள்ள இந்தக் கார் எதற்காகப் பயன்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, காதி போர்டில் மற்ற கிளைகளைப் பார்க்கவும், இங்கே சென்னையில் உள்ள நம்முடைய குறளகத்திற்குக் காதி வாரியத்தின் சார்பாகத் தயாரிக்கப்படும் பொருள்களைக் கொண்டுவந்து சேர்க்கவும் அது பயன்படுகிறது.